முருகப்பெருமான் துணை

**மகான் புலத்தீசர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.08.2023, திங்கட்கிழமை

1. மாதவ குருவே அரங்கா
மரணமில்லாப் பெருவாழ்வு தர
பூதலத்தில் அவதாரம் எடுத்த
பிரணவமே ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது நள்ளி திங்கள்
வரங்களாக இருபானீர் திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 22 ம் நாள், 07.08.2023, திங்கட்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசிதனை
3. ஆசிதனை புலத்தீசர் யானும்
அகிலமே மேம்பட உரைப்பேன்
வாசிவென்று கலியுக மக்கள்
வடிவேலனாரின் அருளை பெற
4. அருளை பெற மக்களை நோக்கி
ஆற்றலாகத் தரும வழிகளை
வரமாகத் தந்தருளி வருக
வையகத்தார் ஏற்று நடந்திட
5. நடந்திட புண்ணிய வழிதனில்
ஞானமோடு தரும பலமும்
இடரின்றி மிகுதியாகி நன்கு
எல்லா வகையும் தேற்றம் காண்கும்
6. காண்கவே அரங்கன் திருவடிபற்றி
கந்தவேலன் வழிபாடு தன்னை
உண்மை வழியாக ஏற்றுமே
உலகோர் தொடர்ந்து செய்து வர

7. வருங்காலம் ஞானபலமாக
வறுமை பகைமை மிரட்டும்
அருந்தவ பலமாக மாறி
அழியாமைக்கு வழிவகை தரும்
8. தருகவே அரங்கன் வழி
தரணியில் இன்னும் கோடி
வருமுலகில் ஞானிகள் படை
வல்லமைபட உருவாகி இனிதே
9. இனிதே கலியும் அஞ்சிட
இணையிலா தவ தருமஞான
கனிவேலவன் வெளிப்பாடான
கண்டுரைப்பேன் காலம் கனிந்து
10. கனிந்துமே ஞானயுகமாற்றம்
கண்டடைந்து உலகமெலாம்
இனிமைபட நடக்கும் செயல்படும்
இணையிலா ஞானிகள் கூட்டம்
11. கூட்டம் பெருகி நன்கு
கூறிடுவேன் தரும ஞான ஆட்சி
வாட்டமற பேருலகு காணும்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–